Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
STC NO.1183/2020

**Depositions of PW- 8**

| Name | திரு.வீரணன் | Occupation | சார்பு ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | கருப்பனன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of July 2026.

23.07.2026

எதிரி ஆஜர்.

**சாட்சி வீடியோ காணொளி மூலம் ஆஜரானார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது காரியாபட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2016 ம்வருடம் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் செய்த சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த சௌந்தரபாண்டி அவர்கள் இறந்துவிட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.01.2016 அன்று 19.30 மணியளவில் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சிறப்பு சார்பு ஆய்வாளர் சௌந்தரபாண்டி சம்பவயிடம் சென்று சாட்சிகள் நாராயணன், ராமசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்பு சாட்சிகள் சதீஷ்குமார், ராஜா மற்றும் வழக்கு பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்லப்பாண்டியன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 11.01.2016 அன்று வாகன விபத்தில் சம்மந்தப்பட்ட TN 67 N 0868 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தையும், காயம்பட்ட நபர் ஓட்டிவந்த TN 84 Y 0383 என்ற பதிவெண் கொண் Honda Passion pro இருசக்கர வாகனத்தையும்

ஆய்விற்காக அனுப்பிவைத்துள்ளார். பின்னர் அன்றைய தினமே நிலையம் ஆஜரான எதிரியை காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் 27.01.2016 இவ்வழக்கு கோப்பை நான் எனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் இளங்கோ அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் அதே தேதியில் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பெற்றேன்.

பின்னர் அன்றைய தினமே காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த திருவில்லிபுத்தூர் மருத்துவர் சுகன்யாதேவி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன். **விபத்து பதிவேடு அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் மேல் சிகிச்சை அளித்த Apollo மருத்துவமனை மருத்துவர் சபரீஷ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். **காயச்சான்று அசாஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் மருத்துவர் கொடுங்காயம் என சான்று வழங்கியதன் பேரில் இவ்வழக்கின் சட்டப்பிரிவை மாறுதல் செய்து காயச்சான்றின் அடிப்படையில் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள்.279, 337 இதசவிலிருந்து பிரிவுகள்.279, 338 இதச ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டமாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். பின்னர் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் அன்றைய தினமே எதிரி மீது பிரிவுகள்.279, 338 இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.